**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அறந்தாங்கி**

**அசல் வழக்கு எண்.** 06/2022

வாக்குமூலம்..வா.சா.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | காத்தாயி | தொழில் | |
| க/பெ. | முருகன் | வயது | 47 / 2025 |
| கிராமம் | | | |
| தாலுகா | | | |

1873-ம் வருடத்து 10-ம் சட்டத்தின் கீழ் சாட்சி பிரமாணம் செய்விக்கப்பட்டு 24.04.2025 ம் தேதியில் விசாரணை செய்யப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தாவா வழக்கில் வாதி/ தரப்பு 1 வது சாட்சி ஆவேன், என்னால் தாக்கல் செய்யப்படும் நிருபணவாக்குமூலத்தை என் தரப்பு முதல் விசாரணையாக ஏற்க வேண்டிகிறேன். 21.04.1982 தேதிய வாதியின் தாயார் காமாட்சி கிரயம் பெற்றத்திற்கான கிரய பத்திரம் இணைதள பதிவிறக்க நகல் தாக்கல் செய்கிறேன். அது வா.சா. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவா 2 வது அயிட்ட சொத்தை பொறுத்து என் தகப்பனாரான 1 ம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட கிரய ஆவணம் இணைதள பதிவிறக்க நகல் தாக்கல் செய்கிறேன் அது வா.சா 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது 15.12.2021 தேதிய 1 முதல் 5 பிரதிவாதிகளுக்கு எனது வழக்கறிஞர் மூலம் அனுபிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் அஞ்சலரசீதுடன் தாக்கல் செய்கிறேன். அது வா.சா. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி அறிவிப்பை 1 முதல் 5 பிரதிவாதிகள் பெற்றுகொண்டதற்கான அஞ்சலக இணையதள குறிப்பு பதிவிறக்க நகல்கள் எண்ணிக்கை 5 தாக்கல் செய்கிறேன் அது வா.சா. 4 வரிசை எண்ணிக்கை 5 ஆக குறியீடு செய்யபடுகிறது. 18.12.2021 தேதிய 1 ம் பிரதிவாதி கொடுத்த பதில் அறிவிப்பு அசல் தாக்கல் செய்கிறேன் அது வா..சா. 5 குறியீடு செய்யப்படுகிறது. தாவா சொத்துக்கான கணிணி சிட்டா கணிணி பதிவிறக்க நகல் தாக்கல் செய்கிறேன். அது வா.சா. 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேலும் ஆவணங்கள் குறியீடு செய்ய முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கபடுகிறது.